திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கோத்தகிரி நகர பகுதியில் 31—3—1978 ஆம் தேதி சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு தற்போது இருக்கிற பேருந்து நிலையத்தை 20 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. மேலும் சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கே சொந்தமாக ஒரு பேருந்து நிலையம் கட்டுவதற்கு இடத்தைத் தேர்ந்தெடுக்கும் பணி நடந்து கொண்டிருக்கிறது. அங்கு விரைவில் பேருந்து நிலையம் அமைக்கப் படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, கோத்தகிரியில் வெகு காலமாகவே பேருந்து நிலையம் இல்லை. அங்கு வரும் பயணிகள் காற்றினாலும், மழையினாலும் தாக்கப்பட்டு, நிற்கக்கூட இடமின்றி, ஒதுங்கக்கூட இடமின்றி அவதிப்படுகிறார்கள் என்று அரசுக்குத் தெரியும். அந்தப் பேருந்து நிலையத்திற்கு வேறு இடம் மாற்றி தரப்படும் என்று வெகு காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி டி.டி.சி.யில் கூட விவாதித்திருக்கிறோம்; அங்கு விரைவில் பேருந்து நிலையத்தைக் கட்ட அரசு வேகமாக நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 9-50)

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் திருப்பத்தூர் கிளை அலுவலகம்.

*வினா எண் 133—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூரில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு கிளை ஆபீசுக்கென சொந்தமாக இடம் வாங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வாங்க அரசு உத்தேசித்துள்ளது?

1979 நவம்பர் 7]

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) ஆம்.

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடம் திருப்பத்தூர் நகராட்சிக்குச் சொந்தமானதால் நகராட்சி ஆய்வாளர், சென்னை, அவர்களின் ஒப்புதல் தேவைப்படுகிறது. அனுமதி கிடைத்தவுடன், நிலத்தை திருப்பத்தூர் நகராட்சியிடம் இருந்து எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. சுந்தரம்: தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் நகராட்சியின் இடமாக இருப்பதால் வாடகை அதிகமாகக் கேட்பதாகவும் அதை விட்டு வேறு இடம் பார்த்திருக்கிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? ஏதாவது ஒன்றை விரைவில் முடிவெடுத்து அரசாங்கம் விரைவில் அந்தக் கிளை ஆபீஸை ஏற்படுத்த முன்வருமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநரும் சேர்ந்து நகரத்தில் மையப் பகுதியில் ஒரு ஏக்கர் நிலத்தைப் பார்வையிட்டு அது நகராட்சியினுடைய இடமாக இருப்பதால் நகராட்சியினுடைய அனுமதி வேண்டி நகராட்சி ஆய்வாளருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்த இடம் ரூ. 68,390 என்பதாக திருப்பத்தூர் தாசில்தார் நிலத்திற்கான தற்போதைய மதிப்பீட்டை தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், நகராட்சி ஆய்வாளர் அவர்களிடமிருந்து பதில் வந்தவுடன் அந்த இடம் வாங்கப்படும்.

திரு. கி. அன்பழகன்: திருப்பத்தூரிலுள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு பணிமனை இல்லாததால் அங்கு ஏறத்தாழ இருபது பேருந்துகள் பாதையிலேயே நிறுத்தி வைக்கப்படுகின்றன. ஆகவே விரைவில் அந்தப் பணிமனையைக் கட்ட அரசு முயற்சி எடுக்குமா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : விரைவாக முயற்சிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.